**தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 136 – விளையாட்டுத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 30 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டனவாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புகள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

---

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

---

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,259.47 மில்லியனாக இருந்ததுடன், இதில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,023.83 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூ235.64 மில்லியன் அதாவது 18.71 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 457.64 | 400.39 | 57.25 | 12.51 |
| மூலதனம் | 801.83 | 623.44 | 178.39 | 22.25 |
| மொத்தம் | 1,259.47 | 1,023.83 | 235.64 | 18.71 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 13601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12.74 | 9.85 | 6.00 | 9.08 | 58.00 | 17.69 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0376/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 3.42 மில்லியன் ஆகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 03 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை 22.73 மில்லியனாகும். விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| 6000/0000/00/0001/0106/000 | 0.05 |
| 6000/0000/00/0002/0147/000 | 0.01 |
| 6000/0000/00/0016/0093/000 | 22.67 |
| மொத்தம் | 22.73 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

விளையாட்டுத்துறை அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படும் பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (உ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஊ) | பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகைப் பதிவேடு | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி |

## 3.2 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 16,990,779 கூட்டுத்தொகையான 05 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

13601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 281,169 கூட்டுத்தொகையான கடன்மீதி 02 வருடங்கள் முதல் 4 வருடங்கள் வரையிலான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரினது ரூபா 210,821 தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரினது ரூபா 119,015 தொகையுமாக ரூபா 329,836 கூட்டுமொத்தமான நிலுவைக் கடன் மீதி 03 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலான காலவீச்சிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கணக்காய்வினால் வெளிப்படுத்தப்பட வேண்டிய சில விடயப் பகுதிகள் போதியளவான பிரகாரம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

அமைச்சிற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் முறையே 05 வருடங்கள் மற்றும் 02 வருடங்கள் அளவிலான காலமாக ஓடக்கூடிய நிலையில் காணப்படவில்லை.

(ஆ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

03 அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரசாங்க அலுவலகங்களுக்குரிய 09 வாகனங்கள் முறையாகக் கையேற்கப்படாமல் அமைச்சின் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(இ) கையேற்கப்படாத ஆதனங்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்

சட்டரீதியாக கையேற்கப்படாத நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியொன்றில் ரூபா 9,943,333 தொகை செலவில் தியவன்னா ஓயாவிற்கு அருகில் வள்ளம் ஓட்டும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 751 | 2014 ஒக்தோபர் 04 ஆந் திகதி ரூபா 12,129,876 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மின் உற்பத்தி இயந்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 880 | பிணைகள் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டிய அமைச்சின் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையினைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | அமைச்சிற்குச் சொந்தமான குழாம் வாகனங்களுக்காக நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை என்பன அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பாதீட்டுச் சுற்றறிக்கை | |
| 2015 மார்ச் 31 ஆந் திகதிய 2/2015 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 756(4) | விஷேட மெய்மையாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டு அகற்றுவதற்குள்ள பொருத்தமான வாகனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. |

**3.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டங்களை பூர்த்தி செய்தலில் தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 35,500,000 கிரயமான 12 செயற்திட்டங்கள் அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களிலிருந்து மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 77,655,522 தொகையான 05 செயற்திட்டங்கள் அமைச்சினால் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

(இ) 2017 இன் ஆசிய விளையாட்டு விழாவை நடாத்துவதற்காக சூரியவெவயில் டெனிஸ் விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிக்கும் செயற்பாடுகள் இலங்கை கடற்படைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அதற்காக உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் அதற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 10,000,000 மற்றம் ரூபா 30,000,000 தொகைகளாக கூட்டுமொத்தமாக ரூபா 40,000,000 இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வேலைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2015 ஏப்ரல் 23 ஆந் திகதிய டீஜீசீஈ/ஜீஈஎன்/205/2012 ஆம் இலக்க கடற்படைப் பணிப்பாளர் நாயகத்தின் (சிவில் பொறியியலாளர்) கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ரூபா 21,218,937 தொகை செலவிடப்பட்டதன் பின்னர் இடையில் நிறுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டமையினால் செலவிடப்பட்ட தொகை சிக்கனமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.8 செயலாற்றல்

செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### 3.8.1 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்

அமைச்சின் பிரதான பணிகள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) கிராமிய விளையாட்டு மைதான அபிவிருத்தி செயற்திட்டத்தை முன்னரே இனங்காணாமை மற்றும் மாவட்ட செயலகங்களின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு உரிய நிதிஏற்பாடு தாமதமாக வழங்கப்பட்டமை என்பவற்றால் 2014 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 56 சதவீதமும், 2015 ஆம் ஆண்டில் 27 சதவீதமும் சேமிக்கப்பட்டிருந்தது. இதனால் உரிய செயற்திட்டங்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2015 ஆகஸ்ட் 12 ஆந் திகதிய எம்எஸ்/2/25/8 ஆம் இலக்க அமைச்சுச் செயலாளரின் கடிதத்தில் பட்டகொல்ல புஸ்ஸதேவ, உடமாதுர வித்தியாபிரதீப குறுபனாவல சேனறத் மற்றும் மடுல்ல இரண்டாம் நிலை பாடசாலைகளில் விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திக்காக ரூபா 21,243,440 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. சகல நிர்மாணங்களையும் 2015 நவம்பர் 30 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யுமாறும் 2016 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்யமுடியாதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த சகல செயற்திட்டங்களும் ஒரு ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரருக்கு அந்த செயற்திட்டங்களின் பணிகளை நிறைவேற்றும் இயலுமை தொடர்பாக மதிப்பீடொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செய்யப்பட்ட

வேலைகளின் செயல்முன்னேற்றம் ஒப்பந்தப் பெறுமதியில் 3.75 சதவீதம் அதாவது ரூபா 581,473 ஆக இருந்தது.

### 3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தம்புள்ள, கலேவல விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நகர அபிவிருத்தி நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனிக்கு 2014 செப்தெம்பர் 25 ஆந் திகதி ரூபா 2,464,884 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் 17 மாதகாலம் முழுவதும் அந்த முற்பணம் ஒப்பந்தகாரரின் கையில் வைத்திருப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. 2016 சனவரி 17 ஆந் திகதி ஒப்பந்தகாரரினால் அந்த முற்பணம் காசோலையினால் தீர்க்கப்பட்டிருந்தது. எனினும், அந்த தீர்த்தல்கள் ஏடுகளில் குறிப்பிடப்பட்டு வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் உரிய காசோலையை ஒப்பந்தகாரருக்கு அனுப்பி அந்த ஒப்பந்தகாரரினால் செயற்படுத்தப்படுகின்ற கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியின் பார்வையாளர் கூட நிர்மாண செயற்திட்டத்தின் பட்டியல்களில் அந்தந்த காசோலை ஈடுசெய்யப்பட்டிருந்தது.

### 3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஒலியைக் கட்டுப்படுத்தும் (Sound Proof) மின் உற்பத்தி இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் கேள்வி மதிப்பீட்டுச் சந்தர்ப்பம் முதல் அதற்குப் பதிலாக ஒலிக்கட்டுப்பாட்டு அறைக்குள் பொருத்தப்பட்டுள்ள ஒலிக்கட்டுப்பாடற்ற (Open type room sound proof) மின் உற்பத்தி இயந்திரமொன்று ரூபா 12,129,876 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட மின் உற்பத்தி இயந்திரத்தை செயற்படுத்தும் போது 04 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தில் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு இடையூறாகும் வகையில் ஒலி ஏற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 3.11 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 26 | 20 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 19 | 07 | 12 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 81 | 71 | 11 | 01 |
| (iv) | ஆரம்ப நிலை | 76 | 68 | 08 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 05 | 07 | - | 02 |
| | மொத்தம் | 207 | 173 | 37 | 03 |